அர.?
4638

விலை அணா 3



# ஹிட்லர் யார்?

ஆர். சி. கே. என்ஸர்
எழுதியது

PRESENTED BY:
V. PR.
PAGANERI.

4638

உலக விவகாரங்களை விளக்கும்
ஆக்ஸ்போர்ட் சிறு நூல்கள்

உலக விவகாரங்களை விளக்கும்
ஆக்ஸ்போர்ட் சிறு நூல்கள்

# ஹிட்லர் யார்?

ஆர். சி. கே. என்ஸர்
எழுதியது

PRESENTED BY:
V. RM. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

INDIAN BRANCH

ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்
பம்பாய் கல்கத்தா மதராஸ்
1942

# HITLER YĀR?

*Translated into Tamil from*

WHO HITLER IS

by R. C. K. ENSOR

(*Oxford Pamphlets on World Affairs No. 20*)

சென்ற மகா யுத்தம் முடிவு பெற்றபோது 30 வயதுள்ள ஹிட்லர் ஜெர்மன் ராணுவத்தில் ஒரு லான்ஸ் கார்ப்பொரலாக இருந்தார். 1919-ம் வருஷம் அவர் ஜெர்மன் தொழிலாளர் கட்சி என்ற ஒரு சிறிய கூட்டத்தில் சேர்ந்துகொண்டார். இந்த கட்சி பிறகு தேசீய சோஷலிஸ்டு (நாஜி) கட்சியாயிற்று. 1921-ம் வருஷம் அவர் அக் கட்சிக்கு ஒரு கொடியை ஏற்படுத்தி அதன் தலைவரானார். 1923-ம் வருஷம் அவர் சிறைபடுத்தப்பட்டபோது, 'என் பிரயத்தினம்' என்னும் அவருடைய சுயசரிதத்தின் முதல் பாகத்தை எழுதி முடித்தார். 1928-ம் வருஷம் இக்கட்சிக்கு ரீக்ஸ்டாகில் 18 ஸ்தானங்கள் தானிருந்தன. 1930-ம் வருஷத்தில் இக்கட்சிக்கு 65 லக்ஷம் வோட்டுகளும் ரீக்ஸ்டாகில் 107 ஸ்தானங்களும் கிடைத்தன. 1933-ல் ஹிட்லர் ரீக்சான்ஸலராகி விட்டார். அதற்கப்புறம் என்ன நடந்ததென்று உலகமறியும்.

ஆகஸ்டு மாதம் யுத்தத்தை ஆரம்பித்து அதன்மூலம் லக்ஷக்கணக்கான மக்களின் யமனாகத் தோன்றிய மனிதனின் சரித்திரத்தை எடுத்துரைக்கிறது. 8 கோடி மக்களின் வாழ்க்கையை கட்டுப்படுத்த நாஜி கட்சி எவ்விதத்தில் அதிகாரம் பெற்றது என்பதையும் இப்பிரசுரம் விளக்குகிறது.

மூன்றாவது வெளியீட்டில் ஹிட்லர் எழுதிய 'என் பிரயத்தினம்' என்னும் புத்தகத்தின் பின் எழுதியுள்ள கொள்கைகளைப்பற்றி ஸ்ரீ என்ஸர் விவரித்திருக்கிறார். இப் பிரசுரத்துடன் அதையும் படித்தல் நலம்.

தமிழில் முதல் பதிப்பு 1942

# ஹிட்லர் யார்?

இந்த உலக மகா யுத்தத்தின் ஆரம்பத்தில், பிரிட்டிஷாருக்கு, பிரதம மந்திரி சேம்பர்லின் செய்த விளம்பரத்தில், 'இது ஒரு மனிதன் யுத்தம்' என்ற தமது தீர்மான முடிவை தெளிவுபட எடுத்துரைத்தார். 'கடைசிவரையில் ஜெர்மனிக்கும், போலண்டுக்கும் கௌரவமான சமாதானம் செய்து வைத்திருக்க முடியும். ஆனால் ஹிட்லருக்கு அது இஷ்டமில்லை' என்று அவர் கூறினார். சேம்பர்லின் கூற்று உண்மையென்று நம்ப போதிய காரணம் இருக்கிறது. ஆகஸ்டு மாத முடிவில் சண்டையா சமாதானமா என்ற முடிவு ஒருவர் கையிலிருந்தது. அவர் சண்டை என்று முடிவு கட்டினார். கோடிக்கணக்கான உயிர்களை மாய்க்க உத்தரவு பிறப்பித்தார்போலும்!

இந்தச் சண்டைக்காரர் யார்? எத்தகைய அந்தஸ்துடையவர்? எவ்விதம் நோக்கினும், அவர் மிகச் சிறப்புற்றவர், அசாதாரணர். பல பெரிய இடையூறுகளுக்கிடையே பெரும்பதவி அடைந்திருக்கிறார். இருபது வருஷங்களுக்குள் ஜெர்மனியிலுள்ள கன்ஸர்வெடிவ் கக்ஷியின் முக்கிய உறுப்பினர்களெல்லாரும் — சேனை உத்தியோகஸ்தர்கள், பெரிய நிலச்சுவான்தாரர்கள், நடுத்தர அந்தஸ்திலுள்ளவர்கள், கோடீசுவர தொழில் முதலாளிகள் — ஒன்று சேர்ந்து செல்வாக்குப்பெற்ற ஹோஹென்ஸாலரென்களின் முழு சம்மதமும் ஆதரவும் பெற்று சாதாரண வேலைக்காரனாயிருந்த ஒருவனுக்கு யதேச்சாதிகாரம் கொடுப்பார்கள் என்று யாராவது ஒரு தீர்க்கதரிசி 1914-ல் முன் கூட்டி அறிவித்திருப்பாரேயாகில், அதை ஒருவரும் நம்பியிருக்க மாட்டார்கள். அதிலும் அவர் ஜெர்மன் அல்ல. ஜெர்மன் - ஆஸ்டிரியன் என்றும், 1914-18 யுத்தத்தில்கலந்துகொண்ட அவர் ஒரு சிறு ஈட்டிப்படைத் தலைவன் பதவிக்கு மேல் எவ்வித பதவியும் அடையவில்லை என்றும், அந்த யுத்தத்

திற்கு முன் வீடு கட்டுகிறவர்களுக்கும், வீடு அலங்கரிக்கிற வர்களுக்கும் உதவியாய் வேலை செய்த அவர் சில மாதங் களுக்குமேல் நீடித்த அந்தஸ்து எதுவும் வஹித்தவர் அல்ல என்றும் சேர்த்துச் சொல்லியிருந்தால், ஒருவரும் ஒருக்காலும் நம்பியிருக்கமாட்டார்கள்.

## இளமையும் வாலிபமும்

ஆஸ்டிரோ - பவேரிய எல்லைப்புறத்திலுள்ள ப்ரௌ னௌ என்ற சிறு ஆஸ்டிரிய பட்டணத்தில் கி. பி. 1889-ல் ஹிட்லர் பிறந்தார். அதே எல்லைப்புறத்தில் வீயன்னுவை விட மூனிக்குக்கு சமீபத்திலுள்ள வேறு சில பட்டணங் களில் அவருடைய வாலிபப்பருவம் முழுவதும் கழிந்தது. அவருடைய முன்னோர்கள், தாய்வழியிலும் சரி, தகப்பன் வழியிலும் சரி, காட்டு விவசாயிகள்; திடதேகமும் நீண்ட ஆயுளும் உடையவர்கள். அவருடைய தகப்பன் சற்று அலாதி. நாற்பத்திரண்டு வயது ஸ்திரீக்கும் அவளது ஆசை நாயகருக்கும் பிறந்தவர். தம்து நாற்பதாவது வய தில் ஆஸ்டிரிய கவர்மெண்டின் வரி வாங்கும் சாமான்ய உத்தியோகஸ்தராஞர். அப்பொழுது தமது மூன்ருவது மனைவியை மணந்தார். பன்னிரண்டு வருஷங்களுக்குப் பின் அத்தம்பதிகளுக்கு அடால்ப் பிறந்தார். நவீன முறை யில் பாடங்கள் கற்பிக்கும் ஒரு பள்ளிக்கூடத்திற்கு அடா ல்ப் அனுப்பப்பட்டார். பையன் பின்னர் கவர்மெண்டு உத்தியோகத்தில் அமரவேண்டும் என்பது தகப்பனின் நினைவு. ஆனல் அடால்ப் சோம்பித் திரிந்தார். சித்திரம் எழுதுவதில் அவருக்குக் கொஞ்சம் பிரியம் உண்டு. தான் சிறந்த ஓவியக்காரன் ஆகலாம் என்பது அடால்பின் கனவு. பையனுக்குப் பதின்மூன்று வயது முடியுமுன் தகப்பன் பரகதியடைந்தார். பிறகு காசநோய் ஏற்பட, பள்ளிக்கூடம் போவது தடைபட்டது. பின்னர் ஐந்து வருஷங்கள் மதோன்மத்தாய் காலங்கழித்தார். சித்திரமும் பழக்கிக்கொள்ளவில்லை. மேற்படிப்புக்கு வேண்டிய பரீட் சை எதுவும் தேறவில்லை. பதினெட்டாவது வயதில் தாய் இறந்தாள். தான் திக்கற்றவன், தனக்கு கிடைத்த பள்

ளிக்கூட வசதியை சரிவர உபயோகப்படுத்தாததால் எவ்வித தொழிலுக்கும் தகுதியற்றவன் என்ற உணர்ச்சி அவருக்கு திடீரென்று ஏற்பட்டது. பிறகு வீயன்னுவுக்குப் போனூர். அங்கு ஒரு காளவாய்க்காரனிடம் வேலைக்கு அமர்ந்தார்.

அப்பெரும் நகரில் ஹிட்லர் ஆரம்பத்தில் பல கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியதாயிற்று. மூன்று வருஷங்கள் அவர் மிக மிக ஏழை ஜனங்களிடையே வசித்தார். 'மெயின் காம்ப்' என்னும் அவர் புத்தகத்தில் விவரிக்கப்படும் கஷ்டங்களும் அக்கிரமங்களும் அவர் நேரில் கண்டவைகளே. நண்பர் இல்லாது, நயம் அறியாது, அவர் காலந்தள்ளினூர். அவருக்கு ஏற்பட்ட அவதி அவரைக் கோபியாகவும் பழிக்கஞ்சாத சண்டைக்காரராகவும் ஆக்கிற்று.

இவ்வஞ்சனை உலகில் ஏய்ப்பவர், ஏய்க்கப்படுபவர் என்று மனிதருக்குள் இருக்கும் இருவகையில் முற்பகுதியில் தான் சேர்ந்துகொள்ளுவதால் ஏற்படும் லாபத்தை நன்கு கண்டு கொண்டார். மனிதவர்க்கத்தை என்னென்ன வழிகளில் தாராளமாய் வஞ்சிக்கலாம் என்று மெயின் காம்பில் சங்கை சிறிதுமின்றி விஸ்தாரமாக விவரித்திருக்கிருர். அவரும் அவருடைய இயக்கமும் ஜெர்மனியிலும் சரி ஐரோப்பாவிலும் சரி, அதிகாரம் அடைய அவ்வழிகளையே ஒழுங்காய்ப் பின்பற்றினர். சரியா தவரு என்று அவர்கள் சிறிதும் யோசிக்கிறதேயில்லை.

## வீயன்னுவின் அரசியல்

அக்காலத்தில் வீயன்னுவில் யார் யார் வசித்தனர் ? ஹாப்ஸ்பர்க் ஸாம்ராஜ்யத்திற்கடங்கிய சிறு நாட்டினர்களின் சிறு சிறு தொகுதிகளும், ஸெக்குகளில் ஒரு பெரும் பகுதியினரும் இருந்தனர். அன்றியும் ஜெர்மன் ஆஸ்டிரியர்களும் யூதர்களும் அங்கு பெருமிதமாக வசித்தனர். யூதர்களின் எண்ணிக்கை குறைவு எனினும் வலுவுள்ளவர்கள். அவர்களுடைய அரசியல் கக்ஷி ஸோஷல் டிமக்ராடிக் கக்ஷி. அக்கக்ஷியின் தலைவர்கள், திறம்படக் காரியம் செய்யவல்லவர்கள். பெரும்பாலும் யூதர்களே. ஜெர்

மன் ஆஸ்டிரியன் ஜனங்களிடையே கக்ஷிகள் பல தோன்றும், மறையும். ஆனால், அவர்களுள் அரசியலில் இரண்டு போட்டிக் கக்ஷிகள் தொடர்ந்திருந்தன. இவ்விரு கக்ஷிகளில் வலுத்தது கதோலிக் குருமார்களுக்கும் ஹாப்ஸ்பர்க் வம்சத்துக்கும் ஆதரவளித்தது. மற்றொன்று குருமார்களுக்கு விரோதம்; ஜெர்மன் பக்கம்; ஜெர்மனியோடு ஆஸ்டிரியாவைச் சேர்க்கத் தடையாயிருக்கும் ஹாப்ஸ்பர்க் வம்சத்தினரிடம் அவர்களுக்கு வெறுப்பு. வீயன்னாவின் அப்போதைய நிலை இருகக்ஷியினரையும் ஸெமைட் இனத்தவரை வெறுக்கச் செய்தது. ஆஸ்டிரியாவின் நிலை அவர்களை ஸ்லாவ் இனத்தவரை, அதிலும் ஸெக்குகளை வெறுக்கச் செய்தது.

கக்ஷி உணர்ச்சியும் கக்ஷி கட்டுதலும் வெகு தீவிரம். இனச்சண்டையும் கக்ஷிச்சண்டையும் பெல்பாஸ்ட்டிலோ லண்டன்டரியிலோ இருந்தவிதம் இருந்தன.

ஜெர்மனியோடு சேர்க்கவேண்டும் என்ற உணர்ச்சியே அதிகமாயுள்ள ஆஸ்டிரியாவின் மேற்கு எல்லைப் புறத்திலிருந்து வந்த இளம் ஹிட்லர், ஜெர்மன்பக்கமாய் உள்ள கக்ஷியில் சேர்ந்தார். ஆனால் ஹாப்ஸ்பர்க் வம்சத்தை ஆதரித்து கதோலிக் பிரதிநிதியாக வீயன்னாவை அப்பொழுது ஆண்ட ‘ கிருஸ்துவ பொது உடமைக்கக்ஷி ’ தமது கக்ஷியைவிட திறம்பட நடத்தப்பட்டது என்று கருதினார். ஸெமைட்டின்பேரில் வெறுப்பை ஊக்கத்துடன் பெருக்குபவரும், பொது ஜனங்களுக்காகப் பேச திறமை வாய்ந்தவரும், அக்கக்ஷித் தலைவருமான டாக்டர் ஸ்யூஜரை அவர் வெகுவாய்ப் பாராட்டினார். ஆரம்பத்திலிருந்தே தமது சொந்த அனுபவத்திலிருந்து யூதர்களிடமும் ஸோஷல் டிமக்ராட்களிடமும் அவருக்கு வெறுப்பு வளர்ந்து வந்தது. ஒரு பெரிய கட்டடத்தில் அவர் வேலை செய்துகொண்டிருந்தார். ஸோஷல் டிமக்ராட் வர்த்தக சங்கத்தில் சேரவேண்டும் என்று அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். சேரமறுக்கவே அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். இதுபோல திரும்பத்திரும்ப நடந்தது. வீயன்னா தொழிலாளிகள் சரி தப்பு அறியக்கூடிய விவேகிகள் அல்ல. முரட்டுத்தனமும் கொள்ளை மனப்பான்மையும்

அவர்களிடம் நிறைந்திருந்தன. திக்கற்ற அந்த இளைஞன் அவ்வழிகளை நன்கு கவனித்து தமதாக்கிக்கொண்டார்.

சமூக அநீதியும் தமக்கேற்பட்ட தோல்வியும் ஹிட்லரை அக்காலத்தில் மிகவும் துன்புறுத்தின. குழந்தைப் பருவத்தில் மத்ய அந்தஸ்துள்ள குடும்பத்தில் வளர்க்கப் பட்ட அவர் சோம்பல், பள்ளிக்கூடத்துக்கு டோகர் கொடுத்தது, ஆகிய காரணங்களால் மிக மிக ஏழையான நிலையை அடையவேண்டியதாயிற்று. மிகக் கேவலமான சேரி வாழ்க்கையின் தினசரி கஷ்டங்களும் வேலையில்லாத் திண்டாட்டமும் அவரைக் கடுமையாய் வருத்தின. அதைப் பார்க்கப் பார்க்க, கோடிக்கணக்கான ஜனங்களை முதலில் தன்னுள்ளே ஆவலாய் அழைத்து, பின்னர் அவர்களை நசுக்கிப் பொடியாக்கும் அந்நகரிடையே தமக்கு வெறுப்பு வளர்ந்துகொண்டே வந்தது என்று அவர் கூறியிருக்கிறார். தமது 21-ம் வயதில் காளவாய் வேலையை விட்டார். சித்திர வேலையிலும், மலிவான வர்ணங்கள் விற்பதிலும், கட்டடங்களுக்கு பூச்சித்திரங்கள் வரைவதிலும் ஈடுபட்டார். இவற்றிலிருந்து அவருக்குக் கிடைத்த வரும்படி மிகக் குறைவு. எனினும் வீடுகளில் சித்திரம் எழுதுவது வர்ணக்கடுதாசிகளால் அலங்கரிப்பது இவைகளால் தமது வயிறு வளர்த்தார். தன்னைச் சித்திரக்காரனுக நினைத்துக்கொள்வதில் அவருக்குப் பிரியம் அதிகம். இப்பொழுதும் அப்படித்தான் நினைத்துக் கொள்ளுகிறார். அவரை அப்பொழுது பார்த்திருப்பவர்கள் கூறும் விவரப்படி அவர் ஒல்லியான வியாதியிலடிபட்ட இளைஞராக காணப்பட்டாராம். பின்னர் பழுப்புச் சட்டை வீரர்களால் தெய்வமாகக் கொண்டாடப்படும் பளுவான பூட்ஸ் அணிந்த வீரருக்கு எவ்விதத்திலும் பொருத்தமில்லாத தோற்றமாம்!

## பார்லிமெண்டுகள் அவருக்கு ஏன் பிடிக்கவில்லை?

தொழில் மாறினபின் அவருக்குப் படிக்க அதிகநேரம் கிடைத்தது. அரசியல் உலகத்தைத் துருவி கவனிக்கத் தலைப்பட்டார். அவர் விஷயம் கிரஹித்த விதம் மிகவும் ருசிகரமானது. பையனுய்ப் படிக்கும் காலமுதல் அவர்

ஒரு தேசீயவாதி, ஜெர்மன் குலப்பற்றுள்ளவர். தேசீயத்தை வேரறுத்த வீயன்னு வேலைக்காரரின் வாழ்க்கை அவரைத் திடுக்கிடச் செய்தது. ஒரு ஜன சமூகத்தில் தேசீய மனப்பான்மை உண்டாக்க முயலுபவர் அதன் ஒவ்வொரு நபரும் கல்வி பயிலவேண்டுவது எவ்வளவு அவசியம் எனக் கருதுவாரோ, அதேபோல அச்சமூகத்தில் ஒற்றுமை மனப்பான்மையையும் ஏற்படுத்தவேண்டும் என்று அவர் எழுதுகிருர். இருபது வயதாவதற்குள் ஆஸ்டிரியன் பார்லிமெண்ட் கூட்டமொன்றைக் கண்ணுற்ருர். பின்னர் ஒருவருஷம் அதன் கூட்டங்களை அடிக்கடி கவனித்தார். ப்ரெஞ்சுப் பார்லிமெண்டைப் போலவே ஆஸ்டிரியன் பார்லிமெண்டும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குள் மறுமுறைவோட்கொடுத்து பிரதிநிதிசபை அமைப்பதுவழக்கம். ஆகவே பார்லிமெண்டில் கக்ஷிகளுக்குக் குறைவில்லை. ஒரு கக்ஷிக்கும் மெஜாரிட்டி இல்லை. ஹிட்லர் அத்தகைய பார்லிமெண்டுகளைக் கூர்ந்து கவனித்து நியாய புத்தியோடு அவற்றைத் தம் புத்தகத்தில் கடுமையாய்க் கண்டித்து எழுதியிருக்கிருர். பார்லிமெண்டு முறையில் வேறு பல விதங்கள் இருக்கின்றன என்பதை அவர் கவனிக்காதது துரதிர்ஷ்டமே. அதனுல் பார்லிமெண்டு முறையையே தள்ளும் மனப்பான்மை அவருக்கு ஏற்பட்டது. பார்லிமெண்டு முறையைத் தள்ளிய ஐரோப்பாக் கண்டத்தின் பெரும்பாலோர் செய்த தவறையே அவரும் செய்திருக்கிருர்.

## மூனிக்குக்குச் செல்லல்

23 வயதில் அவர் வீயன்னுவிலிருந்து மூனிக் சென்ருர். அந்நகரம் அவர் மனதைக் கவர்ந்தது. அம்மோகம் ஒரு பொழுதும் தணியவில்லை. அழகுபெற அமைந்திருக்கும் அந்நகர் பார்க்க ரமணீயமானது. அந்நகர வாசிகளும் வீயன்னு ஜனங்களைப்போல பல பட்டரையாயில்லாமல், துப்புறவாய் ஜெர்மனியர் என்றறிய அவருக்குச் சந்தோஷம். தமது சொந்த ஊர் ஜனங்கள் பேசுவதுபோலவே அந்நகர வாசிகளின் உச்சரிப்பும் இருந்தது. அந்நிய ஊரில் இருந்த

போதிலும் தமது சொந்த ஊரில் இருப்பதுபோலக் கருதி ஞர். வீயன்னுவை விட்டுவந்த அவரிடம் பல தினுசு வெறுப்புகள் ஏற்பட்டிருந்தன. யூதர்களிடமும் கார்ல் மார்க்ஸ் சிஷ்யர்களிடமும் வெறுப்பு ; ஸெக்குகளிடம் வெறுப்பு ; நகரக் கைத்தொழில் முறையில் வெறுப்பு ; ஹாப்ஸ்பர்க்குகளிடம் அதிக வெறுப்பு. கொள்ளைக்கூட்ட அரசியலின் தத்துவங்களையும் வழிகளையும் பற்றி அவருக்கு திட அபிப்பிராயங்களும் யோசனைகளும் இருந்தன. ஹோட்டல்களில் கக்ஷிவாதம் செய்வதைத்தவிர தாம் ஒரு சிறந்த சொற்பொழிவாளர் என்ருவது ஏதாவது ஒரு விஷயத்தில் தமக்கு திறமையிருக்கிறது என்ருவது அவர் கண்டு கொள்ளவில்லை. திடீரென்று நினைத்துக்கொண்டு பரபரப்புடன் ஏதாவது பயனற்ற காரியம் செய்வார். இல்லையேல் ஒரே சோம்பேறித்தனம். **1914**-ம் வருஷ யுத்தம் வரையில் அவர் இவ்வாறு காலங் கழித்தார். அந்த யுத்தம் அவருடைய உண்மைத் திறனை அறியும்படி செய்தது.

## யுத்தத்தில் தம்மை அறிதல்

யுத்தம்புரிய தமக்குக் கிடைத்த வசதியை குஷியோடு ஏற்றுக்கொண்டார்.

'இளமையில் நான்பட்ட அவஸ்தைக்கு இது ஒரு மாற்று. உடனே ஊக்கம் மேலிட்டு உள்ளம்பூரித்து முழந்தாளிட்டு, இக்காலத்தில் ஜீவித்திருக்கும் பாக்கியத்தை எனக்கு அளித்த ஆண்டவனை வாயார வாழ்த்தினேன் என்று இன்று கூற எனக்கு வெட்கம் சிறிதுமில்லை.'

அதற்குமுன் அவருக்கு யுத்தப் பயிற்சி இல்லை. ஆஸ்டிரியாவில் காசநோயால் யுத்தப் பயிற்சியிலிருந்து மன்னிக்கப்பட்டார். அவர் ஜெர்மன் படையில் சேர்ந்துகொண்டு கிட்டத்தட்ட ஆறு வருஷங்கள் கழித்தார். விசேஷ தைரியத்துக்காக முதல் வகுப்பு கிராஸ் பதக்கம் பரிசளிக்கப்பட்டபோதிலும்,ஒரு சிறு ஈட்டிப்படைத் தலைவன் பதவிக்கு மேல் பெரிய பதவி எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை. தம்மையே கவனித்துக்கொண்டு, உத்தியோகஸ்தர்களோடும் இதரர்களோடும் நன்கு பழகத்தெரியாத விசித்திர

சுபாவமுடையவர்போலும்! அந்த யுத்தம் நடக்கும்போது எடுத்த ஷோக்கான புகைப்படம் ஒன்று இருக்கிறது. அது ஹிட்லர், அவருடைய சகபாடிகள் ஆறுபேர் ஆகிய எழுவரின் படம். அந்த அறுவரும் சிரித்துக்கொண்டும் தமாஷ் செய்துகொண்டும் ஆங்கிலேயர்களைப்போல இருக்கின்றனர். தனியாய் எதையோ உற்று நோக்கிக்கொண்டு, எதைப்பற்றியோ யோசனை செய்து கொண்டு சிரிப்பற்றிருக்கும் ஹிட்லரின் முகம், மற்ற முகங்களுக்கு முற்றிலும் மாருகக் காணப்படுகின்றது. அந்த எழுவரில் பிற்காலத்தில் யார் புகழுடையக்கூடும் சொல்லுங்கள் என்று கேட்கப்பட்ட எவரும் ஹிட்லரைக் குறிப்பிட்டிருக்கமாட்டார்கள்.

எனினும் யுத்தம் புரிதல் அவர் சுபாவத்திற்கேற்ற காரியம். அவருடைய உணர்ச்சியும் பேச்சும் அவ்வழியே. இதை விளக்க அவருடைய இரண்டு பேச்சுக்களை உதாரணமாகக் கூறலாம்: போலண்டைத் தாக்கிய தினத்தன்று (1-9-1939) ஜெர்மன் பார்லிமெண்டுக்கு அவர் கூறியதாவது:—'இதுமுதல் நான் ஜெர்மன் ரீக்கின் முதல் யுத்த வீரன். எனக்கு விசேஷப் பிரியமுள்ள சட்டையை மீண்டும் அணிந்துவிட்டேன். வெற்றி வரும் வரையில் அதைக் கழட்டமாட்டேன். அஃதில்லையேல் உயிருடனிரேன்.' கோன்ராட் ஹெஸ்டனின் ஜீவிய சரித்திரத்தில் மற்ெருரு பேச்சு குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதலில் ஹிட்லரின் அந்தரங்க காரியதரிசியும், பின்னர் அவருக்கு அடுத்த பதவியை வகிக்கும் ரூடால்ப் ஹெஸ் மூனிக்குக் கருகில் ஒரு அழகிய ஸ்தலத்திலிருந்த வீட்டை வாங்கி அதை ஹிட்லருக்கு காண்பித்தார். 'தூரத்திலுள்ள ஆல்ப்ஸை உற்று நோக்கிய வண்ணம் உயிர்துறக்க அது எவ்வளவு அழகான இடம்' என்று ஹெஸ் அவரிடம் கூறினுர்.

ஹிட்லர் அதைக் கடுமையாகக் கண்டித்து, ஹெஸ்ஸையும் தன்னையும் போன்ற மனிதர்கள் உயிர் துறக்கத் தகுதியான இடம் யுத்தரங்கமே என்றுர். இந்த மனேபாவம் தாமதித்து உருவடைந்த போதிலும் அதன் மூலே முன்னரேயிருந்தது. குழந்தைப் பருவத்தில் தனக்கு ருசி உண்டாக்கிய முதல் புத்தகம் ப்ராங்கோ - ப்ரஷ்யன் யுத்தத்தைப்

படங்களோடு விளக்கிக் காட்டும் புத்தகம் என்று அவர் கூறுகிறார்.

'அந்த வீர மகா யுத்தம் எனக்கு நற்படிப்பினை தந்த மிகப் பெரிய அனுபவம். அதற்குப் பின்னர் சண்டையையும் யுத்த வீரர்களையும் பற்றிய எல்லா விஷயங்களிலும் நான் நாளுக்கு நாள் அதிக ஊக்கம் காட்டினேன்.'

ஹிட்லர் உத்தமமான யுத்த வீரர், கொள்ளைக்காரருங்கூட. யுத்தரங்கத்திலும் சரி, ஜனங்கள் சார்பாய் வாய்ச் சண்டையிடுவதிலும் சரி அவர் சமர்த்தர். இத்தகைய சாமர்த்தியங்கள் அவரிடம் ஒருங்கே அமையப்பெற்றிருப்பதே அவர் காரியவாதியாகி ஜயம்பெற காரணமாயிருக்கலாம். அது சாதாரணமாய் அமையாத, வெகு துர்லபமாய் அமையும் சேர்க்கை. ஜூலியஸ் ஸீஸருக்கும் இத்தகைய அபூர்வ சேர்க்கைகள் இருந்தன. ஆனால் இருவருக்கும் வித்தியாசம் ரொம்ப இருக்கிறது. ஹிட்லர் ஸீஸரைப் போல பெரிய சேனைகளை தலைமை வஹித்து நடத்தவில்லை. ஸீஸர் உயர் குடும்பத்தில் பிறந்தவர். ஏழை மக்களின் அதிருப்தியை சாக்காகக்கொண்டு அவர்களை ஆதரிக்க முன் வந்தவர். ஹிட்லரோ வெகு சாமான்ய குடும்பத்தில் பிறந்தவர்; வறுமையின் கொடுமையை, தானே அனுபவித்தவர்.

## ராணுவ மனிதன்

ஈண்டு அறியவேண்டிய மிகவும் முக்கியமான விஷயம் ஜெர்மன் ராணுவத்திற்கும் ஹிட்லருக்கும் இருந்த உறவே. தேச விவகாரங்களிலெல்லாம் அவர் ராணுவத்தின் ஆளாகவே இருந்திருக்கிறார். 1919 முதல் அவருக்கு ஏற்பட்ட ஒவ்வொரு உயர் பதவியும் ராணுவத்தாலே கிடைத்தது. 1916-ல் அவர் ஸோம் நதிக்கரை சண்டையில் பலத்த காயமடைந்தார்; ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், அவர் ஒரு ரிஸர்வ்பட்டாளத்துக்கு அனுப்பப்பட்டார். ஆனால் யுத்தரங்கத்தில் நண்பர்களோடு தானும் சண்டை செய்ய அனுமதிக்கப் படவேண்டும் என்று அவர் வேண்டிக் கொண்டார். அவ்வாறே அனுப்பப்பட்டார். 1918

அக்டோபரில் ஒய்ப்ரெஸுக்கு அருகில் பிரிட்டிஷ் விஷக் காற்றால் ஒருவாறு பொட்டையாக்கப்பட்டு வருந்தினார். திரும்பவும் ஆஸ்பத்திரி சென்றார். சமாசாரப் பத்திரிகைகள் படிக்க முடியாதபடி கண் அவிந்து அங்கு இருந்தார். அப்போது ஜெர்மன் புரட்சி ஏற்பட்டது. யுத்தமும் முடிவடைந்தது. ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின், அவருக்குப் போக வீடு இல்லை. வெகு காலமாகவே அவருடைய சகோதரிகளின் உறவு விட்டுப்போய்விட்டது. ஆகவே பவேரியாவில் ட்ரான்ஸ்டீனில் இருந்த படையின் ரிஸர்வ் பட்டாளத்தில் சேர்ந்து ஊழியம் செய்து வந்தார். கட்டாய ராணுவப் படையாக இருந்த அப்பகுதி, பின்னர் வர்ஸேல்ஸ் உடன்படிக்கைப்படி அனுமதிக்கப்பட்ட ரீக்ஸ்வர் படையாக மாற்றப்படும் தருவாயில் இருந்தது.

## ரீக்ஸ்வரின் தத்துவம்

1919-ல் ரீக்ஸ்வரின் அரசியல் தத்துவம் எத்தகையது? அது ஒரு கக்ஷியிலும் சேராமல் குடியரசுக்குச் சாதகமான சேனையா? அல்லது அதற்கென தனி அரசியல் நோக்கங்கள் இருந்தனவா? சந்தேகமில்லாமல் இருந்தது. ஹோஹன் ஸாலெரென் கக்ஷியை உதறித்தள்ளிவிட்டது. 1919 ஏப்ரல், மே - ல் கம்யூனிஸ்ட், மைனாரிட்டி ஸோஷலிஸ்ட் இவர்களின் கலகத்துக்கு விரோதமாக குடியரசு ஸோஷலிஸ்ட் கவர்மெண்டுக்கு உதவிற்று. உள்ளூர அது புரட்சிக் கக்ஷிக்கு எதிர் கக்ஷி. பெரிய தளகர்த்தர்கள் அவ்வளவில்லை, உண்மை அதிகாரம் வகிக்கும் குறைந்த சம்பளத்தில் கஷ்டங்கள் பல அனுபவித்துக்கொண்டு ஊழியம் செய்து வரும் கர்னல்களும் மேஜர்களும் காப்டன்களுமே வர்ஸேல்ஸ் ஏற்பாட்டிற்கு பரம விரோதிகள். தோற்றுவிட்டோம், தங்கள் தோல்வியை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால் மட்டும் அல்ல.

ஜெர்மன் சேனையில் லக்ஷம் யுத்த வீரர்களுக்குமேல் இருக்கக்கூடாது என்று தடை செய்யும் அந்த உடன்படிக்கை, தங்களில் பெரும்பான்மையோருக்கு ராணுவ உத்தியோகம் இல்லாமல் செய்து விட்டதே என்று அப்

பெரிய ஜெர்மன் பரம்பரை உத்தியோகஸ்தர் குழாமின் அங்கத்தினர்களான அவர்கள் சீறி விழுந்தனர். ஆகவே எதிரிகளுக்கு சமர்ப்பித்திருக்க வேண்டிய ஆயுதங்களை ஒழுங்காக ஒளித்து வைத்தனர். அப்பொழுது ஜெர்மனீ யில் அதிகமாய் ஏற்பட்டுக்கொண்டிருந்த வாலண்டியர் படைகளை ஒழுங்குபடுத்தினர். இதில் அவர்களுக்கு இருவித நோக்கம். ஒன்று ஜெர்மன் ராணுவ பலத்தை விருத்தி செய்வது; மற்றொன்று அப்படைகளின் உதவி யால் அவற்றை சிருஷ்டித்தவர்களுக்கு அரசியல் அதிகாரம் பெறுதல் (அவசியம் ஏற்படின் தங்களுடைய ரகசியக் கிடங்குகளிலிருந்து வேண்டிய ஆயுதங்கள் கொடுக்க முடியும்). குடியரசுத்தலைவர்களைக் கொல்லச் சதியும் செய்தனர். 1919-ல் குர்ட் எய்ஸ்னர், 1921-ல் எர்ஸ்பர்கர், 1922-ல் ராதினௌ, இவர்களைவிட அந்தஸ்தில் குறைந்த இன்னும் எத்தனையோ பெயர்கள் கொல்லப்பட்டனர். இத்தகைய காரியங்களில் ஈடுபடும் அவர்களின் உள்நோக் கம் ஒரு பெரிய ஜெர்மன் சேனையை திரும்ப அமைக்க வேண்டும், தேசத்தை மீண்டும் பலப்படுத்த வேண்டும், 1914-18 யுத்தத்தின் வெற்றியை மாற்றவேண்டும் என்ப தே. தங்களுடைய சொந்த க்ஷேமத்தை உத்தேசித்தும், ஒப்பந்த ஷரத்துக்களைக் காப்பதற்காகவும், ஐரோப்பிய சமாதானத்தை நிலை நிறுத்தவும், ஜெர்மன் குடியரசு கவர் மெண்டார் அவர்களை அத்தகைய செயல்களிலிருந்து பிடிவாதமாய்த் தடுத்திருக்கவேண்டும். 1919-ல் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் கலகத்தை அடக்க ஈபர்ட்டும் நோஸ் கேயும் ரீக்ஸ்வரின் உதவியை நாடினது முதல், உதவினவர் களின் கையில் அவர்கள் சிக்கிக்கொண்டனர். அவர்களும் சரி, அவர்களுக்குப் பின் வந்த மந்திரிகளும் சரி, ரீக்ஸ்வரைத் திருத்தி அமைக்கவேண்டும் அல்லது அதனுடைய சதிகளை அமுக்கவேண்டும் என்றாவது எண்ணவில்லை. அசட்டை யாய் ரீக்ஸ்வரை வளரவிட்டதே குடியரசு முடிவில் தொலை வதற்கு முக்கிய காரணம்.

பல இடங்களில் ரீக்ஸ்வர் உத்தியோகஸ்தர் போலீ ஸாரை அமுக்கி அதிகாரம் வஹித்தனர். பவேரியாவில் அப்படித்தான். அதனாலேயே ஹிட்லர் பிரபலமடைய

முடிந்தது. கம்யூனிஸ்டுகளாலும் தீவிர ஸோஷலிஸ்டுகளாலும் மூனிக்கில் ஸோவியத் கவர்மெண்ட் ஏற்படுத்தப்பட்டது; பர்லின் கவர்மெண்டை நடத்திய ஈபர்ட், நோஸ்கே இவர்களின் அங்கீகாரம் பெற்ற பவேரியன் ரீக்ஸ்வர் அச்சோவியத் கவர்மெண்டை பலாத்காரமாக கவிழ்த்தது. அது 1919 மே—ல் நடந்தது. அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர், ஹிட்லர் மூனிக் சென்றிருந்தார். அங்கே ஹோட்டல்களிலும் கிளப்புகளிலும் தமது உயிருக்கே ஆபத்து என்று உணர்ந்தும் லட்சியம் செய்யாமல், கம்யூனிஸ்டுகளுக்கு விரோதமாக ஸோஷல் டிமக்ராட்களுக்கு சாதகமாக வாதித்தார். அதனால் எதிர் கக்ஷியில் யார் யார் முக்கியஸ்தர்கள் என்பது அவருக்குப் புலனாயிற்று. அவர் செய்தது ஒற்றன்வேலை. கம்யூனிஸ்ட் கலகம் அடக்கப்பட்ட பின்னர், வெற்றிபெற்ற ரீக்ஸ்வர், சோவியத் கவர்மெண்டை ஸ்தாபிக்க முக்கியஸ்தர்களாக இருந்தவர்கள் யார் யார் என்று கண்டுபிடித்து, அவர்களை கொலை செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு ஒரு கமிஷனை ஏற்படுத்திற்று. அவர்களுக்கு ஹிட்லர் கூறிய விபரம் மிகவும் உபயோகமாயிருந்தது. அரசியலில் அவர் மும்முரமாய்க் கலந்துகொண்டது அதுவே முதல் தடவை என்று அவர் கூறுகிறார். அரசியலில் மேலும் மேலும் கலந்துகொள்ள வேண்டும் என்ற அவருடைய ஆசையை அவருடைய உத்தியோகஸ்தர்கள் வளர்த்தனர்.

## ரீக்ஸ்வர் ஆதரவுபெற்ற ஹிட்லர்

மூனிக் ரீக்ஸ்வரில் தலைமை வகித்தவர் கர்னல் (பின்னர் தளகர்த்தரான) வான் எப். ஹிட்லர் கக்ஷிக்கு அவர் நல்ல உதவி. ஒப்புக்கு வலது கைபோன்றவர் காப்டன் ரோஹ்ம். பின்னர் ஹிட்லரின் புயல்படையை சீர்படுத்தின முக்கியஸ்தரும் இவரே. ரோஹ்ம் ஒன்றுக்கும் அஞ்சாதவர். அரசியல் கொலைகளில் ஏற்கனவே சம்பந்தப்பட்டவர். பொதுஜன அபிப்பிராயத்தை அசட்டை செய்யக்கூடாது என்று 1918 புரட்சியில் ரீக்ஸ்வர் ஆட்கள் அறிந்துகொண்டனர். மூனிக்கின் ரகசியங்களை நன்கறிந்த அலாதிப் பித்தனை

ஈட்டிப்படைத் தலைவன் ஜனங்கள் சார்பாக வாதிக்க ஆற்றல் படைத்தவன் என்று அவர்கள் கண்டுகொண்டார்கள். அவருக்கு பத்திரிகை இலாகாவிலும், சேனைகளுக்கு சொற்பொழிவாற்றவும் வேலை கொடுக்கப்பட்டது. அப்பொழுது ஜெர்மன் வேலையாட்கள் கக்ஷி—ஒரு சிறு கூட்டம்—தோன்றிற்று. அதனுடைய மீட்டிங்கை ஒழுங்குபடுத்தி நடத்த ஹிட்லர் அனுப்பப்பட்டார். ஹிட்லர் அதில் அங்கத்தினரானார். முதலில் ரோஹ்மையும் பின்னர் கவியும் ஜெர்னலிஸ்டுமானபீட்ரிச் எக்கார்டையும் அதில் சேரும்படி செய்தார். இந்த எக்கார்டே ஆல்பிரட் ரோஸன்பர்க்கினிடமிருந்து தாம் கற்றுக்கொண்ட 'ஆரியஇனம்'போன்ற பலவித அபிப்பிராயங்களை ஹிட்லருக்குப் புகட்டினார். தம்மை அக்கக்ஷியின்பிரசாரத் தலைவராக ஹிட்லர் செய்துகொண்டார். இருபத்தைந்து அம்சங்கள் கொண்ட ஒரு வேலைத் திட்டத்தை அதற்கு வகுத்துக் கொடுத்தார். கொஞ்ச காலத்திற்குள்ளேயே தாம் பேசுமிடமெல்லாம் ஏராளமான கூட்டத்தை வரவழைக்கும் சக்திபெற்று அக்கக்ஷியின் முக்கியஸ்தர் ஆனார். 1920 மே மாதம் முதல் தேதி வரையில் ரீக்ஸ்வரின் ஆளாய் ராணுவச் சம்பளமும் பெற்றார். அதற்குப் பின்னும் ரீக்ஸ்வர் உத்தியோகஸ்தர்கள் அவருக்கு ஆதரவளித்தனர். ரோஹ்மின் வேண்டுகோளுக்கிணங்கி, தளகர்த்தர் எப், 1921-ம் வருஷ ஆரம்பத்தில் பலரிடமிருந்து பணம் வசூலித்தும் மேற்கொண்டு தாம் போட்டும் 'வால்கிஸ் செர்பொபாச்சர்' என்ற பத்திரிகையை வாங்கினார். அது நாஜிப் பத்திரிகையாக ஆக்கப்பட்டது.

அடுத்த இரண்டரை வருஷங்கள் அவருடைய இயக்கம் காளான்போல வளர்ந்தது. போலீஸாரின் சலுகையை சம்பாதித்துக் கொடுத்த மூனிக் ரீக்ஸ்வருக்கு அது பெரிதும் கடமைப்பட்டிருந்தது. அக்காலத்தில் ஜெர்மன் நாணய உலகத்தில் ஏற்பட்ட ஒரே தூக்கலும் பின்னர் அதற்கு முடிவில் நேர்ந்த அழிவும் அவருடைய இயக்கத்திற்கு உதவியாய் நின்றது. எனினும் ஹிட்லரே அதன் முக்கியமான மூலதனம். சண்டையில் சேர்ந்து தன் நிலையை அறிந்த பின், ஏற்கனவே அவரை ஆட்டிவந்த தோல்வி மனப்பான்மை ஓடிவிட்டது. இந்த மனோபாவத்தை

சித்திரக்காரன் சித்திரத்தை வளர்ப்பதுபோல அழகுபெற வளர்த்தார். ஜனங்களைக் கவரவல்ல அழகிய சொற்பொழி வாளரானார். அதுமட்டுமல்ல; நல்ல பிரசாரகராகவும் சிறந்த மேதாவி என்று பிறர் மதிக்கும்படியாயும் இருந் தார். பொது ஜனங்களிடையே தமது அவசியத்தை பெருக்கிக்கொள்ள வேண்டிய சிறு தந்திரங்களையும் உபா யங்களையும் கையாளுவதில் அவர் வெகு சமர்த்தர்.

அதற்கு முன் ஜெர்மனியில் நடந்த அரசியல் கூட்டங் களைப்போல அல்ல அவருடைய கூட்டங்கள்; கொடிகள் பாவட்டாக்கள், மேளங்கள், பாட்டுக்கள் வேஷங்கள் நிறைந்திருக்கும். 1921-ல் அவர் தம் கைகளாலேயே 'ஸ்வஸ்திகா' கொடியைத் தயாரித்தார். 1923-ல் அதைப் பெரிதாய், அழகாய், அதிகப் பார்வை கொடுக்கும்படி செய்தார். இதற்குள் ரோஹ்ம் புயல்படையை ராணுவ முறையில் சீர்படுத்தினார். 1922-ல் ந்யூரம்பர்க்கில் நடந்த காங்கிரஸில் அவர்களில் ஒரு கூட்டம் வெளுர்பழுப்பு யூனிபாரங்கள் அணிந்து பவனி செய்தனர். 1923-ல் பவேரியாவில் நன்கு யுத்தப் பயிற்சி பெற்றவர்கள் 10,000 பேர்கள் இருந்தனர். அது ஒரு டிவிஷனுக்குச் சரி. தலை மைக் காரியாலயம் பர்லினுக்கு மாற்றப்பட வேண்டும் என்ற சூழ்ச்சி பலிக்காமல் போகவே, 1921-ல் அக்கக்ஷித் தலைவர் ஆனார். சூழ்ச்சி தோற்றதற்கு காரணங்கள் மூன்று: (1) ரீக்ஸ்வர் உதவியில்லாமல் காரியம் நடவாது என்று அக்கக்ஷியினருக்குத் தெரியும்; (2) அந்த உதவியை ஹிட்லர்தான் பெற முடியும்; (3) அவருக்கும் மூனிக் ரீக்ஸ்வரிலிருந்துதான் உதவி கிடைக்கக்கூடும்.

## ஜெயம் பெறாத புட்ஷ்

1923-ல் கொஞ்சகாலம் ரீக்ஸ்வருக்கும் ஹிட்லருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டபோது, ரீக்ஸ்வரின் ஆதரவைப் பொருத்தது ஹிட்லரின் வாழ்வு என்பது நன்கு விளங் கிற்று. ஆயுதம் தாங்கிய புயல்படையைக் கொண்டு, ஸோஷலிஸ்டுகளை பயமுறுத்தவேண்டும் என்ற நோக்கத்

தோடு (இது ரோஹ்முக்குத் தெரிந்தே நடந்தது) புயல படை ரீக்ஸ்வரின் கவசசாலையிலிருந்து பல துப்பாக்கிகளை எடுத்தன.

இதையறிந்த ரீக்ஸ்வர் தலைவர் வான் லாஸ்ஸௌ என்ற தளகர்த்தர், ஹிட்லரையும் அவருடைய மனிதர்களையும் சூழ்ந்துகொண்டு, கீழ்ப்படியும்படி வற்புறுத்தினார். விஷயங்கள் வெளிப்பட, கொஞ்சம் ராஜி ஏற்பட்டது. ஆனால் நவம்பர் மாதத்தில் ஜெர்மனிக்கு வெகு நெருக்கடியான சமயத்தில், ஹிட்லரின் புட்ஷ் நடைபெற்றது. (வேண்டாதவர்களையும், விரோத மனப்பான்மையுடையவர்களையும் தொலைக்க எடுக்கப்படும் முயற்சிக்கு புட்ஷ் எனப் பெயர்.) அது வெறும் மிரட்டல். வெற்றி ஒன்றும் ஏற்படவில்லை. ஆயுதம் தாங்கிய புயல்படை, மற்றும் சில வாலண்டியர் படைகள் இவற்றின் உதவியைக் கொண்டு மூனிக்கில் ஒரு புரட்சிக் கவர்மெண்டை ஸ்தாபிக்கவேண்டும் என்பது அவருடைய எண்ணம். அதற்கு தளகர்த்தர் லூடென்டார்ப் உடந்தை. ரீக் சேனைக்கு லூடென்டார்ப்பும், புதிய கவர்மெண்டுக்கு ஹிட்லரும் தலைவராக வேண்டுமென்பது அவர்களுக்குள் ஏற்பாடு. சண்டை செய்ய நேரிடும் என்று அவர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. லூடென்டார்ப்பை தேசமகா வீரர் என்று ரீக்ஸ்வர் வரவேற்கும், போலீசும் அப்படியே செய்யும் என்பது அவர்களுடைய நினைப்பு. லாஸ்ஸௌ, உள்நாட்டு மந்திரி, போலீஸ் தலைவர், ஒவ்வொருவருக்கும் தனித்தனியே புட்ஷ் ஒன்றும் இராது என்று ஹிட்லர் வாக்குறுதி செய்திருந்தார். அவர்களையும், பவேரியா கமிஷனர் கார் என்பவரையும், ஒரு பொதுஜன மீட்டிங்கில் அசப்பில் எதிர்பாராத வேளையில் அவர் தாக்கினார். அவர்களைக் கைதிகளாக்கி துப்பாக்கி முனையில் கார் என்பவரை புது கவர்மெண்டோடு சேரும்படி வற்புறுத்தினார். ஹிட்லரிடமிருந்து தப்பி வெளியே வந்தவுடன் கார், ரீக்ஸ்வரையும் போலீசையும் சேர்த்துக்கொண்டார். தெருவில் கை கலந்தார்கள். சில குண்டுகளுக்குப் பின் முடிவு ஏற்பட்டது. புயல்படையில் 16 பேர்களும், போலீசில் நால்வரும் கொல்லப்பட்டனர். லூடென்டார்ப் பயம் சிறிதுமின்றி எதிரிகளின் துப்பாக்கிகளை நோக்கிச் சென்றார்.

அவர் கைதியாக்கப்பட்டார். ஹிட்லர் சுடப்பட்டு விழுந்தார். ஒரே குழப்பம். அந்தச்சந்தடியில் ஹிட்லர் நகரத்துக்கு வெளியே சென்று, தமது மனிதர்களுக்கு என்ன கதி நேர்ந்தது என்பதைக்கூட கவனியாமல், ஒரு மோட்டாரில் ஏறிக்கொண்டு ஓடிவிட்டார். அவருடைய கை பிசகிப் போயிற்று. அவரைத் தேடிச் சென்றவர்கள் இரண்டு நாட்களுக்குப் பிறகு அவரைக் கைது செய்தார்கள்.

இவ்வாறு தோல்வியடைந்து அவமானப்பட்டபின், பட்டினிபோட்டுத் தன் உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்று அவர் முதலில் எண்ணினர். ஆனல் அவருடைய நண்பர்கள் அது சரியல்ல, என்று கூறி, அவரைத் தடுத்தனர். விசாரணை நடந்தது. அவரும் மற்றும் மூவரும் ஒரு கோட்டையில் ஐந்து வருஷங்கள் காவலில் இருக்கவேண்டும் என்ற தண்டனை விதிக்கப்பட்டது. ரோஹ்முக்கும் மற்றும் மூன்று பேர்களுக்கும் பதினைந்து மாதங்கள். இந்தத் தண்டனையாவது அனுபவிக்கும்படி நேர்ந்திருந்தால், ஹிட்லரின் வாழ்வு முடிந்திருக்கும். தம் கக்ஷித் தலைவர் பதவியை ராஜிநாமா செய்தார். அவருக்குத் தெரியாமலே, ரகசியமாக ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் சட்டத்தை அவருக்கு அனுகூலமாகச் செய்வதில் துரந்தரராய் இருந்தார். ஆகவே ஒன்பது மாதமே அவர் சிறையிலிருந்தார்.

அக்காலத்தில் அவருடைய கக்ஷி சீர்குலைந்து விட்டது. ஒரு பொதுத்தேர்தல் நடந்தது. அதற்கு முன், ரீக்ஸ்டாகில் 32 பேர்கள் அவர் கக்ஷியைச் சேர்ந்தவர்கள். தேர்தலுக்குப் பின் ரீக்ஸ்டாகில் அவர்களுக்கு 14 ஸ்தானங்கள்தான். அதிலும் நாலுபேர்தான் ஹிட்லருக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள். மேலும் பவேரியாவின் கதோலிக் கவர்மெண்டார் அவருடைய கக்ஷிக்கு ஒரு தடையுத்தரவு பிறப்பித்திருந்தனர். ஆஸ்டிரியன் என்ற காரணத்தால் அவரை நாட்டைவிட்டு பகிஷ்கரிக்க ஹேதுவும் இருந்தது.

இந்த சமயத்தில் ஹிட்லர் வெகு சாமார்த்தியமாய் நடந்துகொண்டு தமக்கேற்பட்ட இடுக்கணை சமாளித்தார். விரோத மனப்பான்மை கொண்ட பவேரிய கவர்மெண்டாருக்குப் பணிந்து தம்மீதும் தம் கக்ஷிமீதும் இருந்த

தடையுத்தரவை மாற்றிக்கொண்டார். பிறகு தமது கக்ஷியின் பெரிய கூட்டம் ஒன்று கூட்டினார். அங்கு பெரிய சொற்பொழிவு செய்தார். எல்லோரும் ஸ்தம்பித்துப் போனார்கள். உணர்ச்சி ததும்பிய அந்நேரத்தில் பிளவு செய்வோரிடமும் ஒருவித ராஜி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தந்திரமாய் எடுத்துரைத்தார். அங்ஙனமே 1925 பிப்ரவரியில் முன்போலவே அவரது கக்ஷி வேலை செய்யத் துவக்கிற்று. அதற்கு முன் நாலு வருஷங்கள் ஹிட்லர் அக்கக்ஷியின் தலைவர். அதற்குப் பின் கிட்டத்தட்ட எட்டு வருஷங்கள் அதன் தலைவராக இருந்தார். அக்காலத்தில் வேறு பதவி ஒன்றும் ஏற்கவில்லை.

இனி ஒரு புட்ஷ் செய்வதில்லை என்று ஹிட்லர் கவர்மெண்டுக்கு வாக்குக் கொடுத்திருந்தார். சகஜமாய் அவர் வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதில்லை. ஆனால் இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதென்று அவருடைய எண்ணம். ஜெயிலில் தமக்கு ஏற்பட்ட அவகாசத்தில் அவர் நன்கு யோசித்து மெயின் காம்பின் முதற்பாகத்தை எழுதியிருந்தார். அப்புத்தகத்தில் கண்டிருக்கும் திட்டப்படி ஜெர்மனியை திரும்ப ஆயுதம் தாங்கும்படி செய்து, ஐரோப்பாவில் அதற்கு ஏராளமான இடம் கிடைக்கும்படி செய்ய வேண்டுமானால்,தம்மை உத்தியோகத்தில் திணித்துக்கொள்ளக் கூடாது என்பதை ஸ்பஷ்டமாக உணர்ந்தார். மேலும் ஜெர்மனியில் பெரும்பான்மையோரை தாம் நினைப்பது போல நினைக்கும்படி செய்ய வேண்டும். அதற்குப் பிரசாரம் வேண்டும். பிரசாரத்திற்கு தமக்கு அபார சக்தியிருப்பதாக உணர்ந்தார். மேலும் ரீக்ஸ்வர், உத்தியோகஸ்தர்களுக்கு குறைந்தவர் என்று ஜனங்கள் உணர்ந்திருக்கும் அவ்வேளையில் ராணுவ அமுல் பயன்படாது என்றும் கண்டுகொண்டார். வோட்டுகளையும், ஸ்தானங்களையும் பெறுவதில் முழு கவனத்தைச் செலுத்தவேண்டும் என்றும் ராஜாங்க அமைப்பிற் கிணங்க அவசியமிருக்கும்போது ஆபீஸ் ஒத்துக்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானித்தார்.

தமது தீர்மானப்படியே நடந்துகொண்டார். அவருடைய உற்சாகத்தை குறைக்கும் வகையில் காரியங்கள்

நடந்தேறின. நாலரை வருஷங்களுக்கு நாஜிக் கக்ஷி ஒரு சிறிதும் முற்போக்கு அடையவில்லை. ஜெர்மனியின் செல்வ நிலை முன்னிலும் திருப்திகரமாயிருந்தது. கிளர்ச்சி செய்வது சிரமமாயிற்று. புயல்படையை ராணுவ விஷயங்களில் கவனத்தைக் குறைக்கும்படிக்கும், அரசியல் விஷயங்களில் அதிக கவனம் செலுத்தும்படிக்கும் செய்ய வேண்டியதாயிற்று. அதனால் ரோஹ்முக்கும் அவருக்கும் மனஸ்தாபம். ரோஹ்ம் அவரைவிட்டு விலகினார். அவருக்குக் கீழ்ப்பட்ட கலகப்பிரியர்களான மற்றைய உத்தியோகஸ்தர்கள் தங்களுக்குள் ஒற்றுமை கெட்டு, சதா சதிசெய்து கொண்டிருந்தனர். அவர்களை விட்டு விலகவேண்டுமென்ற எண்ணத்தோடு பர்ச்டிஸ்கேடனுக்கு அருகில் ஓபர்ஸால்ஸ்பர்க் நதிக்கரையில் உள்ள தமது புதிய வீட்டை வாங்கினார். அது ஒதுக்குப்புறத்தில் இருந்தது. சமயம் வந்தால் ஆஸ்டிரியாவின்மீது திடீரென்று பாய அது ஏற்ற இடம். இங்கே வெகுவாய்த் தனிமையில் காலம் கழித்தார். கொஞ்ச நேரம் மெயின் காம்பின் இரண்டாவது பாகத்தை எழுதுவதிலும்; அதிக நேரம் சோம்பேறித்தனத்திலும் அவர் செலவிட்டார். கக்ஷியின் பலத்தை வளர்க்கும் நிதர்சனக் கூட்டங்கள் நடத்தவும், இதர காரியங்கள் செய்யவும், நடுவில் நடுவில் தம் தனிமையிலிருந்து வெளிவந்தார். எனினும் 1923-ல் அவருக்கிருந்த விசேஷ மதிப்பை திரும்பிப் பெற முடியவில்லை. அக்காலத்தில் அவருடைய பக்தர்களாக இருந்தவர்கள் மயக்கம் மாறி, இப்பொழுது அவரிடம் குற்றம் காணத் தலைப்பட்டனர். தலைவர் ஈபர்ட் இறந்தவுடன் காலியான அந்த ஸ்தானத்திற்கு நாஜி அபேட்சகராக லூடென்டார்ப் நிறுத்தப்பட்டார். நாஜிகள் மட்டுமல்ல மற்றவர்களும் அவருக்கு வோட்டுக் கொடுத்தனர். என்றாலும் அவருக்கு ஜெர்மனி முழுவதிலும் இரண்டு லக்ஷம் வோட்டுகள் தான் கிடைத்தன. மெயின்காம்ப் புத்தகம் வெளிவந்தபோது அது அதிகம் விற்கவில்லை. பல வருஷங்கள் ஜனங்கள் மெயின் காம்பை லட்சியம் செய்யவில்லை. அது நஷ்டம் என்றே கருதப்பட்டது. 1928 தேர்தலில் ரீக்ஸ்டாகில் அவருடைய கக்ஷியின் ஸ்தானம் மிகவும் குறைந்தது. பன்னிரண்டுக்கு வந்துவிட்டது.

## உலகப் பொருளாதார நெருக்கடி

ஹிட்லரின் வீழ்ச்சியை மாற்றி அவருக்கு வெற்றி ஏற்படும்படி செய்தது, 1929-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆரம்பித்த உலகப் பொருளாதார நெருக்கடியே. அவ்வருஷக் கடைசியில் ஜெர்மனியில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. ஐரோப்பாவின் மற்ற தேசங்களைவிட அது ஜெர்மனியை அதிகம் பாதித்தது. வெகு சீக்கிரத்தில் முப்பது லக்ஷம் பேர்களுக்கு வேலையில்லாமல் போய் விட்டது. அவர்களில் பெரும்பான்மையோர் இளைஞர்கள் - என்ஜினியர்கள், ரஸாயனர்கள்,மின்சாரவேலைக்காரர்கள், வரவுசெலவு கணக்கில் நிபுணர்கள் - இவர்களெல்லோரும் 1923-ல் நாணய உலகத்தில் ஏற்பட்ட தூக்குதலால் தாங்கள் சேமித்து வைத்திருந்த பணமெல்லாம் இழந்தவர்களின் பிள்ளைகள். இந்தக் கொடும் அதிர்ச்சி லோகார்னோ ஒப்பந்தம் தங்களைப் பரிகசிக்க ஏற்பட்ட மயக்கம் என்று கருதும்படி செய்துவிட்டது. ஜெர்மனியரில் வெகு பேர் மனம் தளர்ந்தனர். அரசியலில் மிகக் கசப்பைத் தரக்கூடியதும் ராஜி ஏற்படக்கூடாததுமான துறையை நோக்கினர். அங்கு ஹிட்லரைக் கண்டார்கள். பாக்கிக் கதையை தேர்தல் முடிவு நன்கு கூறும். 1928-ல் நாஜிக் கக்ஷியின் ரீக்ஸ்டாக் அபேட்சகர்களுக்கு எட்டு லக்ஷம் வோட்டுகள் கிடைத்தன. 1929-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் தேர்தல் வைத்திருந்தபோதிலும் அந்தக் கக்ஷிக்கு அதைவிட அதிகம் வோட்டுகள் கிடைத்திராது. 1930 செப்டம்பரில் நடந்த தேர்தலில் அவர்களுக்கு 65 லக்ஷம் வோட்டுகள் கிடைத்தன. புதிய ரீக்ஸ்டாகில் அவர்களுக்கு 107 ஸ்தானங்கள் கிடைத்தன. அவர்களே அச்சபையில் இரண்டாவது பலமான கக்ஷி. கேடு விளைவித்த புட்ஷ்க்குப் பின் அரசியல் அரங்கத்தில் ஹிட்லர் பெருமை யடைந்தது அதுவே முதல் தடவை.

தமக்குப் பொங்கி வரும் அதிர்ஷ்டத்தை கைநழுவ விடுபவர் ஹிட்லர் அல்ல. அச்சந்தர்ப்பத்தை நன்கு உபயோகித்துக்கொள்ள அவருக்கு சாமர்த்தியம் உண்டு என்பது புலனாயிற்று. ரூர் பிரதேசத்திலுள்ள தொழில் முதலாளிக

ளோடு 1929-ல் ஒரு புதிய, லாபந்தரக்கூடிய தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அம்முதலாளிகளுக்கு அரசியல் விஷயங்களில் செலவு செய்ய ஏராளமான பணம் இருந்தது. அது முதல் 1932-ல் மட்டும் இல்லை, அவர்களிடமிருந்து தவருமல் பண உதவி அடைந்தார். அவர்களுக்காக தேசீயக் கக்ஷித் தலைவர் ஹ்யூஜன்பர்கோடு அதிகம் ஒத்துழைக்க வேண்டியதாயிற்று. அதனுல் அவருக்கு நஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லை. அதே சமயத்தில் இதர முதலாளிகளும் அவருக்கு அதிகப் பண உதவி செய்தனர். ரீக்ஸ்பாங்கின் தலைவர் பதவியை அப்பொழுது ராஜிநாமா செய்த டாக்டர் ஷாக்ட்டின் சிநேகம் அவருக்கு 1930-ல் ஏற்பட்டது. ஜெர்மன் பாங்குகள், பாங்கர்கள் இவர்களின் மத்திய தலைமைச் சங்கத்திலிருந்து ஹிட்லருக்குப் பணம் ஏராளமாக அவர் சம்பாதித்துக் கொடுத்தார். இவ்வளவு பண உதவி கிடைக்கவே கக்ஷியை பலப்படுத்தி விரிவுசெய்ய வசதி ஏற்பட்டது. மூனிக்கிலிருந்த அவருடைய 'பழுப்பு மாளிகை' பெரிய மத்திய ஆபீசாக்கப்பட்டது. அங்கு கக்ஷியின் பதிவு செய்யப்பட்ட மெம்பர்களின் பெயரும், ஒவ்வொருவரின் புகைப்படமும் ஒழுங்காய் வைக்கப்பட்டது. ஹிட்லர் ரோஹ்மை திரும்ப வரவழைத்து புயல்படைச் சேனைகளுக்கு தலைவராக்கினுர். அந்தப் போக்கிரி மேதாவி, ஒரு வருஷத்துக்குள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அடிபட்ட இளைஞர்களைக்கொண்டு யுத்தப் பயிற்சி பெற்ற ஆறு லக்ஷம் பேர் அடங்கிய ஒரு சேனையைத் தயார் செய்தார். வெற்றியைப்போல எதுவும் வெற்றி தருவதில்லை. பொருளாதார நெருக்கடி நீடித்தது. முதலில் அறுபது லக்ஷத்துக்குமேல் பின்னர் எழுபது லக்ஷம் வரையில் வேலையில்லாதவர்களின் சங்கியை வளர்ந்தது. ஆகவே கவர்மெண்டு கக்ஷிகள் மீள வழியில்லை.

1932-ம் வருஷ ஆரம்பத்தில் வான் ஹிண்டன்பர்க்கின் தலைவர் ஸ்தானம் முடிவடைந்தது. காலி விழுந்த அந்த ஸ்தானத்திற்கு ஹிண்டன்பர்க்கோடு ஹிட்லர் போட்டியிட்டார். ஹிட்லருக்கு அவ்வளவு பலம் ஏற்பட்டிருந்தது. முதலில் வோட் எடுத்தபோது ஹிட்லருக்கு ஒரு கோடியே பத்து லக்ஷம் வோட்டுகளும் ஹிண்டன்பர்க்கிற்கு ஒரு

கோடியே எண்பது லக்ஷம் வோட்டுகளும் கிடைத்தன. இரண்டாமுறை வோட் எடுத்தபோது ஹிட்லருக்கு ஒரு கோடியே முப்பது லக்ஷம் வோட்டுகள். ஹிண்டன்பர்க்கிற்கு அதிக செல்வாக்குள்ள வடக்கு, கிழக்கு ஜெர்மனியின் ஜங்கர் பிரதேசத்தில், ஹிண்டன்பர்க்குக்கல்ல, ஹிட்லருக்கே அதிகவோட்டுகள் கிடைத்தன. பிரதம சேனுதிபதியான தலைவர் ஹிண்ட்ன்பர்க் ஹிட்லரை பொஹீமியன் கார்ப்பொரல் என்று இளப்பமாய்க் கூறுவது உண்டு. ராணுவ கன்ஸர்வேடிவ்களுக்கு நாளுக்குநாள் பிரதம சேனுதிபதியிடமிருந்த நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்தது. ஹிட்லரிடம் நம்பிக்கை வளர்ந்து வந்தது. அதன் பலன் என்ன? மே 29, 30-ம் தேதி தனக்கு உதவிய ப்ரூனிங் மந்திரி சபையை விரட்டிவிட்டு, ஹிட்லரின் ஆதரவைப் பெற்ற (அதிக காலம் ஸ்திரமாய் இல்லாவிட்டாலும்) பேப்பன் மந்திரி சபை அமைக்கப்பட்டது. ஜுலை 31-ம் தேதி மற்ருெரு தேர்தல் நடந்தது. அதில் நாஜிகளுக்கு 230 ஸ்தானங்கள் கிடைத்தன. அவர்களே ரீக்ஸ்டாகில் மிகப் பெரிய தனிக் கக்ஷி. மூன்று மாதத்திற்குப் பிறகு பிரஸிடெண்ட், கவர்மெண்டு, ஜனங்களும் ஹிட்லரின் ஹிம்சை வழிகளைக் கண்டு பயந்தனர். மீண்டும் ஒரு தேர்தல் நடந்தது. அவர்களுக்கு இருபது லக்ஷம் வோட்டுகள் குறைந்தன. துருஞ்சியா என்ற பகுதியில் டிசம்பர் மாதம் தேர்தல் நடந்தது. துருஞ்சியா அதுவரையில் நாஜிகளின் கோட்டை. அந்தத் தேர்தலில் அவர்களுக்கு பாதி வோட்டுகள்தான் கிடைத்தன.

## ஹிட்லர் சான்ஸலரானது

வோட்டர்கள் இப்படி மாறி மாறித் தயங்குவது ஜெர்மனியர்கள் ஸ்திர அபிப்பிராயமற்றவர் என்பதை விளக்குகின்றது. அவர்களுக்கு நேர்ந்த பொருளாதாரச் சங்கடத்தில் தங்கள் நிலைமையென்ன என்பதை அவர்கள் அறியவில்லை. சான்ஸலர் பதவிக்குப் போட்டிக்காரர்களும் சூழ்ச்சிக்காரர்களுமான ரீக்ஸ்வர் தளகர்த்தர் ஷ்லீச்சரும், கதோலிக் தேசியவாதி பேப்பனும் ஹிட்லர் கக்ஷியின் பலாபலத்தை அறிந்திருப்பதாக எண்ணிக்கொண்டனர். தேர்

தல்களில் தோற்கடிக்கப்பட்டாலும், (ரூர் பிரதேசத்து தொழில் முதலாளிகள் கொடுத்து வந்த பண உதவியை நிறுத்தியதால்) பணக் குறைவால் கஷ்டப்படுவதாலும், ஹிட்லருக்கும் அவருடைய அதிக செல்வாக்குள்ள லெப்டினன்ட் கிரிகர்ஸ்ட்ராஸருக்கும் ஏற்பட்டிருந்த பிளவாலும், அவருடைய கக்ஷி உடைந்துபோகும் தருவாயில் இருப்பதாக அவர்கள் கருதினர். உடையும் அக்கக்ஷியிலிருந்து முடிந்தவரையில் பலம் சேர்த்துக்கொள்ள அவ்விரு போட்டியாளரும் விரும்பினர். ஹிட்லரையே தம்மோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது பேப்பனின் உட்கருத்து. அந்த முயற்சியில் சான்ஸலர் பதவியை ஹிட்லருக்கே கொடுக்க வேண்டியதாயிற்று. நாஜிகளுக்கு அடங்கி யிருக்கும் எண்ணம் பேப்பனுக்கு இல்லை. தேசீயத்தலைவர் ஹ்யூஜென்பர்க், ஸ்டால்ஹெம் தலைவரும் புயல்படைக்கு கன்ஸர்வேடிப் போட்டிக்காரருமான ஸெல்ட், இவர்கள் அடங்கிய ஒரு கலப்பு மந்திரி சபையில் நாஜிகளை கூண்டிலடைக்கப்பட்ட மைனாரிட்டிகளாக வைக்கவேண்டும் என்பது பேப்பனின் எண்ணம். பொக்கிஷ மந்திரி, பேப்பனின் நண்பரில்ஒருவர். எந்தக் கக்ஷியிலும் சேரவில்லை என்று கருதப்பட்ட ஒருதளகர்த்தர் யுத்தமந்திரியாக்கப்பட்டார். அந்நியநாட்டு மந்திரி ஏற்கனவே வேலைபார்த்த ஒரு கன்ஸர்வேடிவ். உள்நாட்டு மந்திரி ப்ரிக்கும், ஆகாயப்படை மந்திரி கோயரிங்குமே, ஹிட்லரின் நாஜி சகாக்கள். பேரளவில் வைஸ்சான்ஸலராக இருந்த பேப்பன் ஹிட்லரை கஷ்டமில்லாமல் தம்கையில் போட்டுக்கொள்ளலாம் என்று நினைத்தார். 1933 ஜனவரி மாதம் 30-ம் தேதி ஹிட்லரை ஜெர்மன் சான்ஸலராக நியமித்தபோது, ஹிண்டன்பர்க்கும், பேப்பனும் அவ்விதமே கருதினார்கள். அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். பின்னால் வருவதை அவர்கள் கண்டார்களா?

## நாஜிப் புரட்சி

ஹிட்லர் வெகு வேகமாக காரியங்களை நடத்தலானார். ரீக்ஸ்டாகை கலைப்பதில்லை என்று வாக்குறுதி செய்திருந்தார். கதோலிக்குகளிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பை

சாக்காகக் காட்டி, ரீக்ஸ்டாகை கலைக்க நண்பர்கள் இணங்கும்படி செய்தார். தேர்தல் முடிவு எப்படியிருந்த போதிலும், மந்திரி சபையில் மாறுதல் இல்லை என்று அவர்களுக்கு உறுதி கூறினார். ஆனால் அவர் உடனே அதற்கு முன் கண்டறியாத பலாத்காரப் பிரசாரத்திற்கு முழு இடங்கொடுத்தார். ஜெர்மன் ரீக்கின் ஆகாயப்படை மந்திரியான கோயரிங்கே ப்ரஷ்ய உள்நாட்டு மந்திரி. அவர் தங்கு தடையின்றி ப்ரஷ்யப் போலீசை நாஜி மயமாக்கினார். அரசியல் விரோதிகளின் மீது ஏவப்படும் ஆயுத மணிந்த புயல்படை ஆட்களை போலீசார் ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்பது நிச்சயமாயிற்று. அது மட்டுமல்ல. பிப்ரவரி மாதம் 22-ம் தேதி பிறப்பித்த உத்தரவுப்படி புயல்படை மனிதர்களும், ரகசிய உளவுப் படையினரும் ஏராளமாய் ஸ்பெஷல்கான்ஸ்டபிள்களாகசேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஆகவே பல வருஷங்களாக கம்யூனிஸ்ட், ஸோஷலிஸ்ட், ராடிகல், கதோலிக் ஆகிய இவர்களோடு சண்டை செய்து கொள்ளை கொண்ட பக்காத் திருடர்களுக்கு தம் விரோதிகளை இஷ்டப்படி செய்ய முழு அதிகாரம் கொடுக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் ஆபத்து என்பதை சாக்காகக் கொண்டு இவைகளெல்லாம் செய்யப்பட்டன. பிப்ரவரி 25-ம் தேதி ரீக்ஸ்டாகில் தீ விபத்து ஏற்பட்டது. ஹிண்டன்பர்க்கை அமுக்க அதை ஒரு சாக்காக உபயோகப்படுத்திக் கொண்டார். ஒரு உத்தரவு பிறப்பிக்கும்படி செய்தார். அதன்படி அரசியல் அமைப்புள்ள எந்த நாட்டிலும் ஸகஜமாய் வழங்கப்படும் பிரஜா உரிமைகள் நிறுத்தப்பட்டன. மேலும் விசாரணையின்றி மிகக் கடுமையான தண்டனைகள் விதிக்கவும் அனுமதி கொடுக்கப்பட்டது. அதே உத்தரவைக் கொண்டுதான் இன்றைக்கும் அவர் ஜெர்மனியை ஆளுகின்றார்.

அதனுடைய முதல் பலன் நாடெங்கும் பலாத்காரமும் ஹிம்சையும். எதிரிகளின் வீடுகளும் உயிரும் நாசம். இந்த அமளியின் முதற்கோசில் தேர்தல் நடந்தது. நாஜிகளுக்கு 647-ல் 288 இடங்கள் கிடைத்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட 81 கம்யூனிஸ்டுகளை ஜெயிலிலிட்டு தமது கக்ஷிக்கு மெஜாரிட்டி சம்பாதித்துக்கொண்டார்கள். புதுச்சட்டம் ஒன்று

ஏற்பட்டது. அதன்படி அதுவரையில் ரீக்ஸ்டாகிற்கு இருந்த சட்டமியற்றும் அதிகாரம் சர்க்காருக்கு அளிக்கப் பட்டது. அந்தச் சட்டம் இயற்ற ரீக்ஸ்டாகில் மூன்றில் இரண்டு பகுதி மெம்பர்களின் சம்மதம் வேண்டும். அச் சம்மதம் பெற ஹிட்லர் பல வாக்குறுதிகள் செய்தார். ஆனால் பின்னர் அவற்றை லட்சியம் செய்யவில்லை. மந்திரி சபையில் நாஜியல்லாத மெம்பர்கள் அவருடைய கைதிகள் போல ஆனார்கள். பேப்பனைத் தவிர எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக தங்கள் ஸ்தானங்களை இழந்தார்கள். அல்லது நியூராத், ப்ளாம்பர்க் இவர்களைப்போல நாஜி முறையில் காரியங்களை நடத்தினர்.

ஹிட்லர் யதேச்சாதிகாரத்தை எப்படி வளர்த்து முளை யடித்துக்கொண்டார்? தமது ஒரு கக்ஷியைத் தவிர இதர கக்ஷிகளை ஒழித்து ஜெர்மனியர்களுக்கு எப்படித் தலைவ ராக்கிக் கொண்டார்? ஜெர்மனி சிறு நாடுகளைத் தொலைத்து தம்மால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் களைக்கொண்டு அந்நாடுகளை எப்படி ஆளத்தலைப்பட்டார்? வர்த்தக சங்கங்களை எப்படி அழித்தார்? ஜெர்மன் ஸ்தல சுய ஆட்சியில் துளிக்கூட சுதந்திரமில்லாமல் எப்படிச் செய்தார்? நாட்டிலுள்ள பத்திரிகை முயற்சிகளை ஒரு தனி ஆளுகைக்குள் கொண்டு வந்து பத்திராதிபர்களை ஸர்க்கார் ஊழியர்களைப் போல எப்படிச் செய்தார்? நாடக மேடைகள், பிலிம்கள், கலை, விளம்பரம் ஒவ்வொன் றும் எப்படி நாஜி முறையில் கொண்டுவரப்பட்டது? இதைப்போன்ற விஷயங்களைக் கூர்ந்து கவனிப்பதென்றால், வெகு நேரம் பிடிக்கும்.

உள்நாட்டில் அவர் செய்திருக்கும் நிர்மாண வேலைக ளும் அவ்விதமே. நிவாரண வேலை ஸ்தாபனங்கள் ஏற்படுத் தியதில், யூதர்களை துன்புறுத்தி நடத்துவதில் அவருடைய நோக்கங்கள் என்ன? அதனால் ஏற்படக்கூடிய பலன்கள் யாவை? கதோலிக், ப்ராடஸ்டண்டு மதஸ்தாபனங்களோடு அவர் சண்டையிடுவதின் மர்மம் என்ன? இம் மாதிரி விஷ யங்களை எளிதில் அறிந்துகொள்ளமுடியாது. பொருளா தார விஷயங்களில் அவருக்கு அதிர்ஷ்டம் அதிகம். அவர் அதிகாரத்திற்கு வந்த தினமே உலக நெருக்கடி தீர்ந்து

செல்வ நிலைக்குத் திரும்பும் நாளாய் அமைந்தது. தான் பதவி ஏற்பதற்குமுன் போடப்பட்டிருந்த அரசாங்க பொருளாதாரத் திட்டங்களை முதலில் நிறைவேற்றினதில் புத்திசாலித்தனமாய் நடந்துகொண்டார். பிறகு தன் பொக்கிஷத்தை டாக்டர் ஷாக்டிடம் ஒப்புவித்துவிட்டார்.

போலிஷ் யுத்தம் ஆரம்பிக்கும்வரையில், அதாவது 1939-ம்வருஷம்செப்டம்பர்மாதம் 1-ம்தேதிவரையில்,அவர் நடத்திவரும் கவர்மெண்டு முறையில் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் அவருடைய முக்கிய அபிப்பிராயங்களில் மாறுதல் இல்லை, தொடர்ந்து ஒற்றுமை இருக்கிறது என்பதே. இனப் பரிசுத்தத்தை நோக்கமாக கொண்ட ஜெர்மன் நாட்டில் யூதர் இருப்பது தகாது. அவர்களை களைந்துவிடவேண்டும் என்று மெயின் காம்பிலே அவர் கூறியிருக்கிறார். மனிதருக்குத் தகாத முறைகளைக் கையாண்டு அந்தக் காரியத்தை சாதிக்க அவர் பின்வாங்கவில்லை. ஜெர்மனி முதலில் செய்யவேண்டிய காரியம் வர்ஸேல்ஸ் உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கும் 'ஆயுதங்கள் தாங்கக் கூடாது' என்ற ஷரத்துக்களை முறித்து, மீண்டும் ஆயுதம் தாங்கவேண்டும்; ஐரோப்பாவில் ஜெர்மனியே ராணுவத் தலைவியாக இருக்கவேண்டும். நேசதேசத்தவர்களை தைரியமாய் எதிர்த்தால், அவர்கள் ஜெர்மனியைத் தடைசெய்ய முடியாது. இவ்வாறு அவர் கூறியிருக்கிறபடியே நடத்திக் காட்டி, தன் முன்னறிக்கையின் உண்மையையும் விளக்கிக் காட்டிவிட்டார். 1938 ஆகஸ்டு செப்டம்பர் மாதங்களில் ஜெர்மனியின் பலம் அபாரமாயிருக்கும் என்று அவர் கூறியிருக்கிறார். அவ்வாறே ஜெர்மனி பலம் பெற்றது. அதைப் பரீட்சை செய்ய ப்ரான்சிற்கும் பிரிட்டனுக்கும் தைரியம் இல்லை. ஜெர்மனிக்குத் தேவையானவை காலனிகள் அல்ல, கடற்படை அல்ல, பழிக்குப்பழி வாங்குவதும்கூட அல்ல.. ஜெர்மனிக்கு வேண்டியவை (1) ஒற்றுமை, அதாவது ஆஸ்டிரிய ஜெர்மனியர்களை சேர்த்துக்கொள்ளல்; (2) நில விஸ்தரிப்பு, அதாவது ஜெர்மனியின் தாய்நாடு பெரிதாவதற்கேற்ப கிழக்கு ஐரோப்பாவில் சண்டை செய்து நாடு ஜெயித்தல். அவருடைய இந்த அபிப்பிராயங்களை நிறைவேற்றும் நோக்கத்துடனே ஆஸ்டிரியா, ஸெக்

கோஸ்லவேகியா, மெமெல், போலண்டு ஆகிய நாடுகள் அடுத்தடுத்து சேர்த்துக்கொள்ளப்பட்டன. அவர் ஸோவி யத் ரஷ்யாவோடு அனுக்ரமிப்பு ஒப்பந்தம் செய்துகொள் ளும் வரையில் அவர் ஏற்கனவே தமது புத்தகத்தில் போட் டிருக்கும் திட்டத்தில் மாறுதல் இல்லை. தமது காரியமான பின், இந்த ஒப்பந்தம் நீடிக்கும் என்று சொல்ல முடியாது.

## கொள்ளையர் இரக்கமின்மை

தமது திட்டப்படி நடப்பதில் ஹிட்லர் சிறிதும் இரக் கம் காட்டமாட்டார் என்பது 1934-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதி வேண்டாதவர்களை விரட்டின விதத்தி லிருந்தே நன்கு தெரியும். ஏற்கனவே ரோஹ்மைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. 1934 ஜனவரி மாதம் 1-ம் தேதி தமது முக்கியலெப்டினன்ட்கள் எழுவருக்கு அவர்களுடைய வேலைத்திறனைப் பாராட்டிக் கடிதம் எழுதினார். ஜெர்மன் பாஷையில் நெருங்கின பழக்கத்தைத் தெரிவிக்கக்கூடிய 'து' என்ற பிரதிப் பெயர்ச்சொல்லை ஒருவருக்கு மட்டுமே அவர் உபயோகித்தார். முப்பது லக்ஷம் பயிற்சிபெற்ற பேர் கள் அடங்கிய புயல்படையின் பெரிய தலைவரான ரோஹ் முக்கே அங்ஙனம் எழுதப்பட்டது. ரோஹ்ம் ஒரு கொலை யாளி, துன்மார்க்கன். எங்கேயோ கிடந்த ஹிட்லர் அத் தகைய உயர்பதவி அடைய, மற்றவர்களைவிட ரோஹ்மே அதிகம் உதவியிருக்கின்றான். மேலும் 1930-க்குப்பின் மீண் டும் விசேஷத்தொண்டு புரிந்திருக்கிறான். ஜெர்மனி திரும் பவும் ஆயுதம் தாங்க, புயல்படை அடிகோலி என்பது அவ ருடைய எண்ணம். புயல்படை முழுவதையும் தமது புதிய சேனையில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பது ஹிட்ல ரின் விருப்பம். ரீக்ஸ்வர் தலைவர்கள் அதை எதிர்த்தார்கள். சிறு கூட்டமாகிய தாங்களே அழிந்துவிடக்கூடும் என்று அவர்கள் பயந்தார்கள். புரட்சிக்கார ரோஹ்ம் தனது புயல் படையில்சேர்த்திருக்கும்கடைக்கூலியாட்கள் வேலைகற்றுக் கொள்ளும் சிறுவர்கள் முதலியவர்களை உத்தியோகஸ்தர்க ளாகவும் தங்களுக்கு சமானமானவர் என்றுஒப்புக்கொள்ள அவர்கள் மறுத்தனர். ஏனெனில் உயர்வகுப்பு தாழ்ந்த வகு ப்புஎன்ற எண்ணங்கள் அவர்களை விட்டுவிலகவில்லை. இந்த

சச்சரவு வலுத்தது. ஹிட்லர் அதை முடிவு செய்யவேண்டியதாயிற்று. நெருக்கடி தோன்றும்போதெல்லாம் எப்படி வழக்கமாய் நடந்துகொள்ளுவாரோ அதேபோல ரீக்ஸ்வர் பக்கமிருந்தார். அதனால் ஏற்படும் கஷ்டம் யாது என்று அவருக்குத் தெரியும். அவருடைய தீர்ப்புக்கு ரோஹ்முக்கு அழிவு என்றே அர்த்தம். கொள்ளைக்கார ரோஹ்ம் அதை லேசில் ஏற்றுக்கொள்ளுவாரா? பின்னர் ஏற்பட்ட சதியில் ரோஹ்ம் சம்பந்தப்பட்டாரோ என்னவோ சரியான ருசு இல்லை.

எது எப்படியிருப்பினும் ஹிட்லருக்குமுதல் அடி கிடைத்தது. ஜூன் மாதம் அன்று விடியற்காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கு முன்னரே, புயல்படையின் பெரிய தலைவர்களும் உத்தியோகஸ்தர்களும் கைது செய்யப்பட்டனர். தலைமைக் காரியாலயத்தில் இருந்த ரோஹ்மும் மற்றவர்களும் ஹிட்லராலேயே நேரில் பிடிக்கப்பட்டனர். விசாரணை ஒன்றும் இல்லை. எல்லாரும் அன்றே கொல்லப்பட்டனர். சிலர் கையால் ரோஹ்ம் உள்பட மற்றவர்கள் ஜெயில் முற்றத்தில் சுடப்பட்டனர். அவர்கள் இறந்த பின் ஹிட்லர் இறந்தவர்களின் குற்றம் என்று கூசாமல் கூறலானார். இது எப்பொழுதும் அவருக்கு வழக்கம். ஆஸ்டிரியர்கள், ஜெக்குகள், போல்கள் இவர்களை நசுக்கின போதும் இதே பல்லவிதான். அவர்களின் பேரில் குற்றஞ் சாட்டிய ஸ்திரி துன்மார்க்கம் அவர்களில் பலபேரிடமிருந்தது. பத்து வருஷங்கள் இப்படி நடந்திருந்தும் ஹிட்லர் ஒன்றும் செய்யாது விட்டுவந்திருந்தார். அந்தப் படுகொலைக்கு துர்நடத்தையே காரணம் என்றும் ஒருவரும் நிச்சயமாய் நினைக்கவில்லை. தாம் ஏறின ஏணியை உதைத்து எறிவதுபோல ஜூன் மாதம் 30-ம் தேதி ஷ்லீச்சரும் பேப்பனின் காரியதரிசியும் கொல்லப்பட்டனர். பேப்பன் அகப்படவில்லை. அதனால் அவர் தப்பினார்.

## அவருடைய அரசியல் முறை

அவர் நிரம்ப புத்திசாலியாக இருந்தபோதிலும், அவருடைய சுபாவத்தில் சாதாரணமான அம்சம் ஒன்றுஉண்டு. தான் செய்யத் தயாராயிருக்கும் காரியங்களை குறைக்

காமல் நேர்முகமாய் செய்து ஜெர்மனியிலும் ஐரோப்பாவிலும் பல ராஜதந்திர நிபுணர்களை ஆச்சரியப்படும்படிக்கும் வியர்க்கும்படிக்கும் செய்துவிட்டார். வலுவில் யுத்தம் செய்ய ஜெர்மனியை ஆயுதம் தாங்கும்படி செய்தார். அவர் அவ்வாறு செய்து கொண்டிருக்கும்போது பிரிட்டனிலும் ப்ரான்ஸிலுமுள்ள அரசியல் நிபுணர்கள் அதற்கு வேறு நோக்கங்கள் இருக்கும் என்று போட்டி போட்டு சொல்லிக் கொண்டிருப்பதில் காலங்கழித்தனர். கொள்ளைக்காரர்களின் தத்துவங்களையே அவர் எப்பொழுதும் பின்பற்றியிருக்கிறார். 'பயமுறுத்தலுக்குள்ள சக்தியைக் கவனி, பயமுறுத்துகிறபடி செய்தால்தான் பலன்.'

'ஒருவனை எதிர்க்க திட்டம்போடும்போது அவனுடைய குணத்தைக் குறை; அவன்பேரில் பழிபாவங்களைச் சுமத்து. அவனுடைய நண்பர்கள் கூட ஒருவாறு நம்பி அவனை இளப்பமாக நினைக்கும்போது அவனை அடித்து வீழ்த்து. காலதாமதம் செய்யவேண்டின், அது தருகிறேன் இது தருகின்றேன் என்று சொல்லு. கிடைத்த காலத்தையோ லாபத்தையோ வைத்துக்கொண்டு வாக்குறுதியை நிறைவேற்ற அவசியம் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்.' கொடுத்த வார்த்தையை காப்பாற்றுவதில்லை என்பதில் ஹிட்லருக்குச் சமானம் யாருமில்லை. பிறநாடுகளுக்கு அவர் கொடுத்த வாக்குறுதியையும் அவர் நிறைவேற்றுவதில்லை. ப்ரெஞ்சு பிரிட்டிஷ் பிரதம மந்திரிகள் அவரோடு ஒப்பந்தம் செய்துகொண்டு பயனில்லை - ஏனென்றால் அவர் அதன்படி நடப்பதில்லை - என்று கூறிவிட்டார்கள். அவர்கள் ஜெர்மன் அரசியலில் ஹிட்லரின் செயல்களை கவனித்திருப்பார்களாயின், அந்த முடிவிற்கு ஏற்கனவே வந்திருக்கக்கூடும். ராணுவ முறையில் அமைக்கப்பட்ட ரைன்லாந்தில் தம்மைத் தனியே விட்டுவிட வேண்டும் என்று 1936-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் ஹிட்லர் என்ன பேச்சு பேசினாரோ, அதே பேச்சை 1939-ம்வருஷம் அக்டோபர் மாதம் போலண்டை ஜெயித்த பின்னர் தம் விஷயத்தில் யாரும் தலையிடக் கூடாதென்று பேசினார். 1936-ல் அந்நிய கவர்மெண்டார்கள் ஏமாந்தனர். 1939-ல் ஏமாறவில்லை. அவருடைய சுபாவம் போகும் போக்கு 1936-லேயே தெரியலாயிற்று. அப்

பொழுதே அதைத் தெரிந்து ஜெர்மன் அதிகாரமும் பலமும் விசேஷ பரிமாணம் அடையுமுன் அதற்குத் தகுந்த பரிகாரம் தேடியிருந்தால், உலகத்தில் இத்தகைய ரத்தவெள்ளமும் ஆபத்தும் ஏற்படாமலிருந்திருக்கலாம்.

அவர் எத்தகைய குணமுடையவர் என்று கண்டு கொள்ள முடியவில்லை. அதைப்பற்றி புதிர்கள் இருந்து கொண்டேயிருக்கின்றன. மனோதத்துவ சாஸ்திரிகள் அவரை பித்தன் என்று கருதுகிறார்கள். உண்மையாகவே, கோபம் வரும்போது பைத்தியக்காரனைப் போல அலறுகிறார். ஒரு காரியத்தை உத்தேசித்தே — ஜனங்களிடம் பயம் உண்டாக்க — அவர் அவ்விதம் செய்கிறார். இன்னும் சிலசமயங்களில் பிறர் ஊமையாகும்படி, விடாது பேசிக் கொண்டிருப்பார். அதுவும் லாபத்தைக் கோரியே எனத் தோன்றுகிறது. தினப்படி வாழ்க்கையில் அதிக சுறுசுறுப்பை அல்லது விசேஷ அஜாக்கிரதையைக் காணலாம். கால அட்டவணைப்படி எதையும் அவரால் செய்ய முடியாது. தமது காரியதரிசிகள் அவருடைய கால அட்டவணையைக் குறிக்கும்படி அவர் விடுவதில்லை. பல நாட்கள், பல வாரங்கள் கூட பள்ளிக்கூட நாட்களில் இருந்தது போல மிகுந்த சோம்பேறியாய்க் காலங் கழிப்பார். சூட்சுமதரிசிகளுக்கு அத்தகைய செயலற்ற காலம் தேவை போலும்! ஹிட்லரும் ஒரு சூட்சுமதரிசியே.

மற்றவர்களோடு பழகுவதில் ஹிட்லர் ரொம்ப மாறியிருக்கிறார். ஒரே பிள்ளை. ஆகவே வாலிபப் பருவத்தில் அவர் சங்கோஜி. தனிமையில் கழித்தார். பலஹீனனாயிருந்தார். அவர் கலியாணம் செய்து கொள்ளவேயில்லை. **1914-18** யுத்தத்தில் சமாசாரம் கொண்டு போகும் தூதனாயிருந்தபோது, அவர் விசேஷ தைரியம் காட்டினார். கீழ்ப்படியும் குணமுள்ளவர் என்று அவருடைய மேல் உத்தியோகஸ்தர்கள் கூறியிருக்கின்றனர். ஆனால் மற்ற யுத்த வீரர்களை நெருங்க விடுவதில்லை. முப்பது வயதுக்குமேல் அவருடைய தேகத்தையும் குணத்தையும் வளர்த்துக் கொண்டார். தம்மிடத்தில் தமக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. பிறரோடு பழகக் கற்றுக்கொண்டார். கூட்டத்தோடு சாப்பிடுவதில் அவருக்குப் பிரியம் அதிகம்.

சான்ஸலர் ஆவதற்குமுன் பெரிய போகணியில் உள்ள ஆகாரத்தை உபாய வேலைக்காரர்களோடு சாப்பிடுவார். இன்றைக்கும் பர்ச்டிஸ்கேடனில் பல விருந்தினர்களோடு உண்ண அவருக்கு விருப்பம் அதிகம். இதாலிய சர்வாதிகாரிக்கும் அவருக்கும் இந்த விஷயத்தில் ஒரு விசித்திர வித்தியாசம். முசோலினி தனிமையில்தான் உணவருந்துவார்.

நெப்போலியனைப்போல ஹிட்லரும் சாதாரண குணங்களை அபரிமிதமாக அமையப் பெற்று விசேஷத்திறமையுள்ளவராக இருக்கிறார் என்று ஒருவாறு கூறலாம். சாமான்ய ஜனங்களுக்கு அவரிடம் நல்ல பயபக்தி. ஏனெனில் அவர்கள் எப்படித் தாறுமாறாய் யோசிக்கின்றார்களோ, ஹிட்லரும் அவ்வாறே நினைக்கின்றார். அவருடைய சக்தியையும் யஜமானத்துவத்தையும் சந்தேகிக்க முடியாது. நாஜிப் புரட்சியால் அநேக திறமைசாலிகள் வெளிவந்திருக்கின்றனர்! கியாதிபெற்ற வெளி நாட்டினரையும் அது சேர்த்துக் கொண்டிருக்கிறது. சிலர் கலகம் செய்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் — அவரை அதுவும் அவர் முன்னிலையில் — எவராலும் அமுக்க முடியவில்லை. அவர் வழிகாட்டியே; பின்பற்றிச் செல்லுபவர் அல்ல. பிரிட்டிஷ் ராஜ தந்திரியிடம் கோயரிங் ஒருதரம் கூறியதாவது: 'ஏதாவது தீர்மானம் செய்ய வேண்டுமானால், அப்பொழுது கல்லும் சரி நாங்களும் சரி. தீர்மானம் செய்கிறவர் ஹிட்லரே.' இயக்கத்தின் சக்தி அவர் கையிலிருக்கிறது. அதன் பொறுப்பும் அவரிடமே.



THE B. N. PRESS, MADRAS

4638

# உலக விவகாரங்களை விளக்கும் ஆக்ஸ்போர்ட் சிறு நூல்கள்

விலை அணா 3

இவ்வெளியீடுகளில் கீழ்க்கண்டவைகள் தமிழில் பிரசுரமாயிருக்கின்றன.

1. ஹிட்லர் தன் சுபாவத்தை வெளிப்படுத்தி எழுதிய 'என் பிரயத்தினம்' ('மைன் காம்ப்') (நெ. 3). ஆர். சி. கே. என்ஸர் எழுதியது.
2. இந்தியா (நெ. 32). எல். எப். ரஷ்ப்ருக் வில்லியம்ஸ் எழுதியது.
3. ஹிட்லர் யார்? (நெ. 20). ஆர். சி. கே. என்ஸர் எழுதியது.
4. யுத்த படங்கள்: 15 படங்களும் அவற்றின் விளக்கமும் (நெ. 22).
5. நாஜி ஆட்சியில் தொழிலாளர் கதி (நெ. 33). வில்லியம் ஏ. ராப்ஸன் எழுதியது.

ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்

பம்பாய் கல்கத்தா மதராஸ்